Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 28, 2023

வியாழக்கிழமை செப்டெம்பர் 28, 2023 | ஒளி: 09 கதிர்: 094 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# ரூ.23 கோடி தங்கம்: ஐவர் சிக்கினர்



சுமார் 23 கோடி ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்களை சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்த நான்கு பெண்களும் ஆண் ஒருவரும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து புதன்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் டுபாயில் இருந்து இரண்டு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ஒருவர் வெட்டி படுகொலை: 8 பேருக்கு மரண தண்டனை

கூரிய ஆயுதங்களால் வெட்டி நபர் ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்ட எட்டு பிரதிவாதிகளுக்கு களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன புதன்கிழமை (27) மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அல்லது அண்மித்த நாட்களில் களுத்துறை தெற்கில் உள்ள கலீல் பிளேஸில் வசிக்கும் சேயர் மொஹமட் மொஹமட் பாரிஸ் என்பவர் கூரிய ஆயுதங்களால் கொல்லப்பட்டமை தொடர்பில் எட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

46 வயதான மொஹமட் ஜைன் முகமது ஹம்சா, 49 வயதான அப்துல் கரீம் மொஹமட் ரவிஸ்தீன், 59 வயதான மொஹமட் மவ்ஸ் மொஹமட், 45 வயதான மொஹமட் ரியாஸ்தீன் மொஹமட், 47 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் ஜின்னா, அனைவரும் களுத்துறை, மஹா ஹினடியங்கல பகுதியைச் சேர்ந்த 43 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் பிர்தவ்ஸ், 44 வயதான மொஹமட் சஹீர் மொஹமட் சியாம், 45 வயதான மொஹமட் நிலாப்தீன் மொஹமட் அஜில் ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# மனைவியின் கர்ப்பை அகற்றல்: கணவன் பொலிஸில் முறைப்பாடு

■ மு.தமிழ்ச்செல்வன்

தனது மனைவியின் கர்ப்பப்பை அகற்றிய சம்பவம் தொடர்பில் அப்பெண்ணின் கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தனது மனைவி செவ்வாய்க்கிழமை (26) பிரசவத்துக்காக அன்று அனுமதிக்கப்பட்டார்.

தனது மனைவிக்கு புதன்கிழமை (27) சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இறந்த நிலையில் குழந்தை எடுக்கப்பட்டதுடன், எனது மனைவியின் கர்ப்பப்பையும் அகற்றப்பட்டுள்ளாக குறித்த கணவன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

குருந்தி ரஜமஹா விகாரைக்குச் சொந்தமில்லாத காணியில்

# ஆலயம், விகாரைக்கு 3 ஏக்கரை ஒதுக்குக



குருந்தி ரஜமஹா விகாரை அமைந்துள்ள தொல்பொருள் காப்புப் பகுதிக்கு சொந்தமில்லாத காணியில் இருந்து 3 ஏக்கர் காணியை ஒதுக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன முன்மொழிந்துள்ளார்.

பௌத்த விகாரை மற்றும் இந்து ஆலயம் மற்றும் பொது வசதிகளுக்காகவும் அமைப்பதற்கும் இந்த காணியை ஒதுக்குமாறு, , இளைஞர் பாரம்பரியம் மற்றும் நவீன குடிமக்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு முன்மொழிந்துள்ளார்.

குருந்தி ரஜமஹா விகாரை பௌத்த தொல்பொருள் இடமாக தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார். எனவே, இந்த நிலம் தொல்லியல் ரீதியாக ஒவ்வொரு இலங்கையர்களுக்கும் சொந்தமானது என்றார்.

தொடர்ச்சி P2

# 225 பேரும் இணைந்தால் இல்லாதொழிக்கலாம்



விசேட பிரமுகர்களுக்கான வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி விமான நிலையத்தில் இருந்து தங்கம் கொண்டு வந்த எம்பிக்கு எதிராக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானம் கொண்டு வந்ததைப் போல மது, புகையிலை, சிகரெட் மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு 225 எம். பிக்களும் சம்மதித்தால், நாடு என்ற வகையில் முன்னுதாரனமாக செயற்பட முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# அமைச்சர் பதவி தேவையில்லை

■ செ.தி.பெருமாள்




அமைச்சுப் பதவி ஒன்றைப் பொறுப்பெடுத்தால் அந்த அமைச்சு பதவியின் ஊடாக மக்களுக்குச் சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு மக்களுக்கு சேவை செய்ய முடியா விடின் அமைச்சர் பதவி தேவையில்லை என்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அமைச்சு பதவி மூலமாக மக்களுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதை அமைச்சராக இருந்த காலத்தில் தான் செய்து காட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# ஜேர்மனியில் ரணில் பதிலுக்கு ஐவர் நியமனம்



ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ள "பேர்லின் குளோபல்" மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (27) அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்க ப்பட்டுள்ளன.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,

தொடர்ச்சி P2

# தமிழக மீனவர்கள் 17 பேரும் விடுதலை

■ புகழிந்தன்



யாழ்ப்பாணம் நெடுந்தீவில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 17 பேரும் புதன்கிழமை (27) விடுதலை செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரம், ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 17 மீனவர்களும் கடந்த 13ஆம் திகதி, நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதன்போது அவர்களது மூன்று விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில், இந்த வழக்கானது ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் திரு.கஜநிதிபாலன் அவர்கள் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது மீனவர்கள் 17 பேரையும் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18மாத சாதாரண சிறைத்தண்டனை என்ற அடிப்படையில்,

தொடர்ச்சி P2

# கடுமையான முடிவுகளை எடுக்கும் நேரம் வந்துள்ளது



வரி வசூலிக்கும் முறை இல்லாதது குறித்து அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வரி விதிப்பு உயர்வுக்குப் பின்னர், 10 இலட்சம் புதிய வரிக் கோப்புகள் திறக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்த போதும் தற்போது, பத்தாயிரம் கோப்புகள் மாத்திரமே புதிதாக திறக்கப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அந்தக் கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக அமைந்தன.

தொடர்ச்சி P2

# முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை



ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் முதல் மீளாய்வுக்காக இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதிய தூதுக்குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தலைமையிலான குழுவினரின் மதிப்பாய்வு விஜயத்தின் பின்னர், இலங்கை மத்திய வங்கியில் புதன்கிழமை (27) நடத்திய ஊடக சந்திப்பில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின்

# முதற்கட்ட செயற்பாடு 2024 ஜூனில் ஆரம்பம்



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் முதற்கட்ட கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் அடுத்த 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்தது.

வலுசக்தி மற்றும் போக்குவரத்துப் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அதன் தலைவர் நாளக பண்டார கோட்டேகொட தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே அமைச்சின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம், 2022ஆம் ஆண்டுக்கான விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2022ஆம்ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை என்பவற்றை ஆராய்வதற்காக குறித்த அமைச்சு மற்றும் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடட் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஆலயம், விகாரைக்கு 3 ஏக்கரை ஒதுக்குக

இதேவேளை, வடக்கில் அடையாளம் காணப்பட்ட தொல்பொருள் இடங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுமாறு அதிகாரிகளுக்கு குழு பணிப்புரை விடுத்துள்ளது.

குருந்தி ரஜமஹா விகாரை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு துறைசார் கண்காணிப்புக் குழுவிடம் பல முன்மொழிவுகளை முன்வைத்தது.

மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு தொடர்பான பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழு உபுல் மகேந்திர ராஜபக்ஷ தலைமையிலும் வும், ஊடக இளைஞர் பாரம்பரியம் மற்றும் நவீன குடிமக்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு லலித் வர்ண குமார தலைமையிலும் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

இங்கு கருத்துரைத்த தொல்லியல் பணிப்பாளர் நாயகம், கடந்த 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் குருண்டி ராஜமஹா ஆலயத்தைச் சுற்றியுள்ள தொல்பொருள் காப்புப் பகுதிக்கு 229 ஏக்கர் காணி சொந்தமானது.

GPS தொழில்நுட்பத்தினூடாக அடையாளம் காணப்பட்ட நினைவுச் சின்னங்களின் அடிப்படையில் இந்தப் பிரதேசம் விஞ்ஞான காப்புப் பிரதேசமாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குருந்தி ரஜமஹா விகாரையைச் சுற்றியுள்ள தொல்பொருள் காப்புப் பகுதியின் பரப்பளவை மேலும் உறுதிப்படுத்துவதற்காக நிபுணர் ஆய்வுக் குழுவொன்று ஆய்வுக்கு தயாராக இருப்பதாகவும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

ஆறு மாதங்களுக்குள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பணிப்பாளர் நாயகம், தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்களை இனங்கண்டு, தொல்பொருள் காப்புப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தவும், தொல்பொருள் பெறுமதி இல்லாத பகுதிகளை விடுவிக்கவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் குருந்தி ரஜமஹா விகாரையை சூழவுள்ள பகுதி கதிர்காமம் பூஜா பூமியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட வேண்டுமென குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

குருந்தி ரஜமஹா விகாரையைச் சூழவுள்ள தொல்பொருள் காப்புப் பகுதியில் விவசாயம் செய்து வரும் மக்களுக்கு இழக்கப்படும் காணிகளை வேறு பிரதேசத்தில் இருந்து வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என அமைச்சுக்களின் தலைவர்கள் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலியே ரத்ன தேரர், ஜயந்த கடகொட, எம்.ராமேஸ்வரன், சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, பேராசிரியர் சன்ன ஜயசுமண, சார்ள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்ச்சையினை ஏற்படுத்திய குமுழமுனையில் அமையப்பெற்ற குருந்தூர் மலை, குருந்தி என்றே அழைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூ.23 கோடி தங்கம்: ஐவர் சிக்கினர்



முதல் விமானத்தில் மூன்று பெண்களும் ஆணொருவரும் அதிகாலை 01.10 மணிக்கு வந்துள்ளதுடன், மேலும் ஒரு பெண் துபாயிலிருந்து காலை 05.25 மணிக்கு வந்த விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

இவர்கள் அனைவரும் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்பதுடன் அடிக்கடி விமானங்களில் பயணிக்கும் வர்த்தகர்கள் குழு என தெரியவந்துள்ளது.

06 கிலோ கிராம் எடையுள்ள நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை உடலிலும், அவர்கள் கொண்டு வந்த கைப்பைகளிலும் மறைத்து வைத்திருந்த போது, சுங்க அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் இந்த குழுவினரை தடுத்து வைத்து இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மனைவியின் கர்ப்பை அகற்றல்: கணவன் பொலிஸில் முறைப்பாடு

இவை மருத்துவ தவறுகளின் காரணமாக இடம்பெற்றது எனத் தெரிவித்து, அந்த பெண்ணின் கணவரான இராசதுரை சுரேஸ் என்பவர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது குழந்தை வயிற்றுக்குள்ளே இறப்பதற்கும், தனது மனைவியின் கர்ப்பப்பை அகற்றப்படுவதற்கும் மருத்துவர்களின் தவறே காரணம் எனவும் தனது வாழ்க்கையில் இனி குழந்தை பாக்கியமே இல்லாத நிலைமைக்கு தனது குடும்பத்தை தள்ளிவிட்டார்கள் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேர்மனியில் ரணில் பதிலுக்கு ஐவர் நியமனம்

பதில் நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்ப பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்கால உலக அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு தீர்வுகாண்பதற்கான உயர்மட்ட முனனெடுப்பான "பேர்லின் குளோபல்" மாநாடு பல நாட்டுத் தலைவர்களின் பங்கேற்புடன் செப்டெம்பர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாநாட்டில் முதல் நாளன்று அரச தலைவர்கள கலந்துரையாடலில் ஆரம்ப உரையை நிகழ்த்தவுள்ளார்.

இம்மாநாட்டில், ஜேர்மன் சான்ஸலர் ஒலாப் ஸ்கொல்ஸ், பெல்ஜிய பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ , கசகஸ்தான் ஜனாதிபதி கெசெம் ஜோமார்ட் டோகயெவ், ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்ள்ஸ் மிஷெல் உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார கொள்கை மற்றும் நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேபோல் இந்த கலந்துரையாடலில் உலகின் முக்கிய நிறுவனங்கள் பலவற்றின் நிறைவேற்று அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

ஜேர்மனுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ஜேர்மன் சான்ஸ்லர் ஒலாப் ஸ்கொல்ஸ் , ஜேர்மனியின் பிரதான அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜேர்மன் வணிக மற்றும் தொழில் சபையின் உறுப்பினர்களையும் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் நிறைவில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜேர்மன் சான்ஸலரின் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு கொள்கை தொடர்பிலான ஆலோசகர் ஜென்ஸ் பிளொண்டரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

## தமிழக மீனவர்கள் 17 பேரும் விடுதலை

நிபந்தனையுடன் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் உரிமை கோரிக்கை வழக்கின் பின்னர் கைப்பற்றப்பட்ட விசைப் படகுகளை விடுவிக்க மன்றில் தீர்மானிக்கப்பட்டதாக நீரியல் வள திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

## கடுமையான முடிவுகளை எடுக்கும் நேரம் வந்துள்ளது

அரசாங்கம் மற்றும் நாணய நிதியத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து நாட்டுக்கு அறிவிக்க உள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்த மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. அதன்படி, பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருதல், அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரித்தல், அரச வரி வருமானத்தை அதிகரித்தல் அவசியமாகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 1667 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்திடமிருந்து 1217 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்திலிருந்து 217 பில்லியன் ரூபா என்ற வகையில் 3101 பில்லியன் ரூபா வருமான இலக்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஆனால் இதுவரை மூன்று திணைக்களங்களும் மொத்தமாக, கிட்டத்தட்ட 1643 பில்லியன் ரூபா மாத்திரமே வசூலித்துள்ளன.

மூன்று திணைக்களங்களும் குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட போது, 2022 ஆம் ஆண்டு இந்த நிறுவனங்கள் உரிய வரியை முறையாக வசூலிக்கத் திட்டங்களை தயாரித்திருந்தால் இந்த வருமானத்தை எட்டியிருக்க முடியும் என்பது அதன்போது தெரியவந்தது.

இந்த நிறுவனங்களின் திறமையின்மை மற்றும் முறைகேடுகள் காரணமாக அரசாங்கம் இலங்கை சுங்கத்தில் இருந்து வருடமொன்றுக்கு சுமார் 360 பில்லியன் ரூபாவையும், மதுவரித் திணைக்களத்தில் இருந்து வருடத்திற்கு சுமார் 60 பில்லியன் ரூபாவையும் இழந்துள்ளது.

போலி ஸ்டிக்கர்களால் மதுவரித் திணைக்களத்தின் வருமானம் மீண்டும் 40% குறைந்துள்ளது. மதுவரித் திணைக்களம் மேற்பார்வைக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு பணிப்புரைகள் விடுக்கப்பட்ட பின்னர், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி மது போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு சில அதிகாரிகளின் திறமையின்மையினால், அரசியல்வாதிகள் மீது மக்களால் குற்றம் சுமத்தப்படுவதாக நாம் தொடர்ந்து கூறுகின்றோம். எனவே, இந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க முறையான திட்டம் தயாரிக்கப்பட்டால், அரச வருமானத்தை அதிகரிக்க முடியும்.

அரச வருமானம் அதிகரிப்பதை நாம் காணவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கவனம் செலுத்தாத பிரதான நிறுவனங்களும் வர்த்தகர்களும் இந்நாட்டில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அரசுக்கு வரி செலுத்துவதில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இவற்றைக் கவனிப்பதற்கான உரிய வேலைத்திட்டமும் இல்லை.

நாட்டு மக்களுக்கு மானியங்கள் வழங்குதல், அபிவிருத்தி நடவடிக்கைகள், அரசாங்க ஊழியர்களின் சம்பளம் வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களும் அரச வரி வருமானத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. வரி வருமானத்தை அதிகரிப்பது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மீண்டும் சிந்திக்க வேண்டும் "என்றார்

## 225 பேரும் இணைந்தால் இல்லாதொழிக்கலாம்

போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை பெறுவதற்கான விசேட பாராளுமன்றக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புகையிலை,சிகரெட்,மதுபானம் தொடர்பான வரி வருமானம் நாட்டுக்கு சரியாக கிடைக்காமல் போவது சில அரச அதிகாரிகள் நிறுவனங்களின் கைப்பாவையாக மாறியுள்ள பின்னணியில் என்று குறிப்பிட்டார்.

225 பேரும் இணைந்து சட்டங்களை இயற்றினால் இதனையும் இல்லாதொழிக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிறைச்சாலைகளில் இருந்த போதும் கடத்தல்களை மேற்கொள்வதால் இவர்களுக்கு எதிராக சிங்கப்பூரில் உள்ளதைப் போன்று கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதன் மூலம் தற்போதைய பாடசாலை கட்டமைப்பை ஆட்கொண்டுள்ள போதைப்பொருள் கடத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## அமைச்சர் பதவி தேவையில்லை

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மஸ்கெலியா பிரதேச தோட்டக் கமிட்டி தலைவர்களுக்காக மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் ஆலய பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர், "எனது இருபது வருட மலையக அரசியல் வரலாற்றில் மாகாண சபை உறுப்பினராக பாராளுமன்ற உறுப்பினராக பிரதி அமைச்சராக அமைச்சராக படிப்படியாக பதவி நிலை பெற்று மக்களுக்கு ஏற்ற வகையில் சேவையாற்றி இருக்கிறேன் .

ண்நல்லாட்சி காலத்தில் நான் ஏற்றுக் கொண்ட அமைச்சு பதவி மூலமாக மலையகத்தில் இதுவரை எவரும் செய்ய முடியாத அபிவிருத்தி திட்டங்களை செய்து காட்டினேன்.

அதனால் தான் மக்கள் இன்னும் அந்த அபிவிருத்தி திட்டங்களை நினைவு கூர்ந்து வருகின்றனர். அரசியல் காழ்ப்புணர்வோடு நான் என்றும் செயற்பட்டது கிடையாது. மக்களைப் பிரித்தாளும் தந்திரம் என்னிடம் கிடையாது.

எனது அரசியலில் ஒவ்வொரு தீர்மானமும் மக்களின் மனம் அறிந்து தான் எடுக்கிறேன். தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு பதவி ஒன்றைப் பொறுப்பு எடுக்குமாறு எனக்கு பலமுறை அழைப்பு வந்த போதும் நான் அதனை நிராகரித்து விட்டேன் "என்றார்.

## முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை

செப்டம்பர் 14ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இலங்கைக் விஜயம் செய்த குறித்த குழு நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் திட்டத்தின் முதல் மதிப்பாய்வின் அனுமதியை ஆதரிக்கும் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளைப் பற்றி கலந்துரையாடியது.

எவ்வாறாயினும், இலங்கை மக்கள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து தற்போது மீண்டு வருவதாகவும், கடினமான, மிகவும் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் பீட்டர் ப்ரூயர் குறிப்பிட்டார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை தென்படுகின்ற போதிலும் முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மை இதுவரை உறுதி செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் கட்டமைப்பு சீர்திருத்தங்களில் அதிகளவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாகவும், புதிய மத்திய வங்கிச் சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டம் உட்பட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டங்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டால், நிர்வாகத்தை மேம்படுத்த முடியு எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நிரந்தரமான மீட்சி மற்றும் நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை நோக்கி பொருளாதாரத்தை ஒரு பாதையில் வைப்பதற்கு சீர்திருத்த வேகத்தைத் தக்கவைப்பது மிகவும் முக்கியமானது என்று குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அதிகாரிகளுடன் பொருளாதார செயல்திறன் மற்றும் நீட்டிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் முதல் மதிப்பாய்வின் அடிப்படையிலான கொள்கைகள் குறித்து ஆக்கபூர்வமா ன கலந்துரையாடல்களை தமது குழு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளது.

## முதற்கட்ட செயற்பாடு 2024 ஜூனில் ஆரம்பம்

இதில் இலங்கை துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலத்துக்கு குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் கட்டுமானப் பணிகளில் 20 வீத முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், 2025ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இதனை முழுமையாகப் பூர்த்திசெய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் அமைச்சின் அதிகாரிகள் குழு முன்னிலையில் தெரிவித்தனர்.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளில் 20% முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் நிர்மாணப் பணிகள் 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.


அத்துடன், 2022ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் தமது நிறுவனம் இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்திருப்பதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடட் நிறுவனம் தெரிவித்தது. இதற்கு அமைய இவ்வருடத்தின் முதல் 7 மாதங்களில் தமது நிறுவனத்தின் நிகர லாபம் 18 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

உலகெங்கிலும் உள்ள விமான போக்குவரத்து தொடர்பான பணியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி குழுக்களுக்கான சர்வதேச மாநாடு இந்த ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியரர்) லிமிடட் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். அதற்காக உலகின் முன்னணி விமான நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பல அமைப்புகள் வரவுள்ளன.

அடுத்த நூற்றாண்டில் இலங்கையின் புவியியல் அமைவிடத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கடல் மற்றும் விமான சேவைகள் தொடர்பாக இலங்கைக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் குறித்துத் தேசியக் கொள்கையொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து தலைவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அதன்படி இதுவரை தயாரிக்கப்பட்ட தேசிய கொள்கை வரைவு குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் என அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

## அதிபர்களுக்கான வெற்றிடங்கள்:

# பூர்த்தி செய்யுமாறு உத்தரவு



இலங்கை அதிபர் சேவையின் தரம் III-இற்கான 4,718 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஆட்சேர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான இடைக்கால தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய மேலும் சில மனுக்களை வாபஸ் பெறுவதற்கு மனுதாரர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றுநிருபத்தை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவும் புதன்கிழமை (27) நீக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு புதன்கிழமை (27) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## மனத்தூய்மைக்கான தியான பயிற்சி ஆரம்பம்



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின்னிடமிரந்த கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த ச. கோயங்காவால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றி அறிமுகம்.

குருஜி எஸ் என் கோயங்காவின் வழிவந்த தியான ஆசிரியர்கள், சுப்பிரமணியம், திருமதி. ஜானகி மற்றும் சிவக்குமார் அவர்களும் தமிழ், ஆங்கில மொழிகளில் ஒக்டோபர் 1 முதல் 10ம் திகதி வரை பத்து நாட்கள் தியான பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக வியாழக்கிழமை (28) இலங்கை வருகிறார்கள்.

இவர்களது பயிற்சி நெறி நுவரெலியா காயத்ரி பீடத்தில் வெள்ளிக்கிழமை (29) காலை 10:30 - 1:30 வரை லும், மாலை 3 மணி முதல் 4 மணி வரை இளைஞர்களுக்கான நிகழ்ச்சி, ஹவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலிலும் நடைபெறவுள்ளது.

30 செப்டம்பர், மாலை 4 - 6 மணி வரை லபுகல, பம்பரகல தோட்டக் கோவிலும், 1 அக்டோபர், காலை 9 - 10 மணி வரை நுவரெலியா காயத்ரி பீடத்தில; அறநெறி மாணவர்களுக்கான நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

கோயங்கா ஜி யின் சிஷ்யர்களான சுப்பிரமணியம், ஜானகி சுப்பிரமணியம் ஒருங்கிணைக்கும் இப்புனித நிகழ்வை நுவரெலியா லயன்ஸ் கிளப், நுவரெலியா ரொட்ரிக் கிளப். நுவரெலியா காயத்ரி பீடம், நுவரெலியா இந்து கலாசார பேரவை, நுவரெலியா வர்த்தக சங்கம், கொஸ்கம - தம்மா சோபா தியான மையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

## சட்டவிரோத பொருட்களுடன் மூவர் கைது



சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களுடன் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு 10 பிரதேசத்தைச் சேர்ந்த 22, 27 மற்றும் 46 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து சட்டவிரோதமான பொருட்களுடன் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 09 மடிக்கணினிகள், 121 அலைபேசிகள், 100 சிறிய ரக அலைபேசிகள், 240 சார்ஜர்கள், தொலைபேசி பேட்டரிகள் மற்றும் போன் கவர்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## விசேட குரு பாதுகை பூஜை





கொழும்பு, கொட்டாஞ்சேனை ஶ்ரீ வரதராஜ வினாயகர் ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள ஶ்ரீ சாயி நாதனின் சரணாலயத்தில் வெள்ளிக்கிழமை (29) பூரணை அன்று காலை 8.30 மணி முதல் இலங்கை திருநாட்டில் முதன் முறையாக பக்தர்களின் பாதுகை வழிபாடு மற்றும் பகல் 1 மணிக்கு திருவாசக முற்றோதல் நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பிரதி பூரணை தினத்தன்றும் அடியார்கள் தனித்தனியே அமர்ந்து செய்யும் பலவிதமான பூசைகளை நடாத்த சத்குரு சீரடி சாயி வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்.

அவ்வகையிலே, முதன் முறையாக குருவின் பாதுகைகளுக்கு தங்கள் கைகளாலேயே அபிஷேக பூசை செய்ய திருவருள் கூடியுள்ளது. இந்நிகழ்வுக்கு, தத்தாத்ரேய அவதாரி அக்கல்கோட் மகராஜ் ஶ்ரீ சுவாமி சமர்த்தர், மகா பெரியவா, மற்றும் ஶ்ரீ சத்ய சாய் பாபா  இவர்களின் விசேட பாதுகைகள் சாயி சரணாலயத்திற்கு கொண்டுவரப்பட்டு பக்தர்களுக்கு தரிசனம் தர ஏற்பாடு ஆகியுள்ளது.

ஶ்ரீ வரதராஜ வினாயகர் கோவிலில் இருந்து வெள்ளிக்கிழமை (29) காலை 8.30 மணிக்கு புறப்படும் பாதுகை ஊர்வலம், 9 மணிக்கு சாயி சரணாலயத்தை அடைந்ததும் பக்தர்களின் பாதுகை வழிபாடு ஆரம்பமாகும். காலை 11 மணிக்கு பூசை முடிவடைந்ததும் சாயி பகல் ஆரத்தியும் அன்னதானமும் வழங்கப்படும்.



## கெசல்கமுவ ஓயாவுக்கு காங்கிரஸால் விமோசனம்

■ எஸ். சதீஸ்

காசல் ரீ நீர் தேக்கத்துக்கு நீரேந்தி செல்லும் பொகவந்தலாவ கெசல்கமுவ ஓயா சுத்தப்படுத்தும் பணி புதன் கிழமை(27) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

14 மில்லியன் ரூபாய் செலவில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொது செயலாளரும் நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டைமானின் பணிப்புரைக்கமைய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளரும் நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி இராமேஸ்வரன் இந்த திட்டத்தினை திரை நீக்கம் செய்து ஆரம்பித்தார்

இதற்கமைய பொகவந்தலாவ கில்லார்னி பாலம் தொடக்கம் பொகவந்தலாவ டியன்சின் பாலம் வரை கெசல்கமுவ ஓயா சுத்தப்படுத்தும் பணி முதற் கட்டமாக 1.6 கிலோ மீற்றர் தூரத்தினை 4 மில்லியன் ரூபாய் செலவில் சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி இராமேஸ்வரன் உட்பட மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கணபதி கனகராஜ் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ரவி குழந்தைவேல் என பலரும் கலந்து கொண்டனர்.

## மூன்று சம்பவங்களில் நால்வர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் இடம்பெற்ற நான்கு சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாயாருக்கு கூரிய ஆயுதத்தால் தாக்கிய ஒருவரும், கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரும், சந்தேகத்தில் நடமாடிய மற்றும் குடிபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவர் அடங்கலாக 4 பேரை செவ்வாய்க்கிழமை (26) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜயந்திபுர பிரதேசத்தில் குடும்பதகராறு காரணமாக தனது சகோதரியை அவரின் வீடு தேடிச் சென்று கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டபோது, அதை தடுக்க முற்பட்ட தாயாரின் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கியதையடுத்து அவர் படுகாயமடைந்தார். தாயார் மீது தாக்குதலை மேற்கொண்ட மகன் கைது செய்யப்பட்டுள்ளார். காயங்களுக்கு உள்ளான தாயார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

> **“ தனது சகோதரியை அவரின் வீடு தேடிச் சென்று கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டபோது, அதை தடுக்க முற்பட்ட தாயாரின் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கியதையடுத்து அவர் படுகாயமடைந்தார்**

அதேவேளை, புதூர் பிரதேசத்தில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன் அந்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய 25 வயதுடைய இளைஞன் ஒருவர் உட்பட இருவரை கைது செய்தனர்

இதனை தொடர்ந்து வீதிபோக்குவரத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த ஒருவரை நிறுத்தி சோதனையின் அவர் மதுபோதையில் இருப்பதை கண்டு அவரை கைது செய்யனர்.

இந்த 3 சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கற்பிட்டி வெடிப்பில் சிப்பாய் மரணம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கற்பிட்டி கண்டல்குளி பகுதியில் உள்ள விமானப்படை முகாமில் வெடிகுண்டு செயலிழக்கும் இடத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இளம் விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவில் பணியாற்றிய புத்தளம் - பல்லம பகுதியைச் சேர்ந்த ரணசிங்க எனும் 28 வயதுடைய இளைஞனே குறிப்பிட்ட சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகவும் மற்றொரு விமானப்படை வீரர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, வெடிகுண்டு அல்லது முக்கிய பரிசோதனை ஒன்றை நடத்திய போது மேற்படி வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

## தேங்கியிருக்கும் குப்பைகளை அகற்றவும்

■ செ.தி.பெருமாள்





மத்திய மலைநாட்டில் தொடர்ந்து பெய்யும் கன மழையால் மவுசாகல காசல்ரீ மேல் கொத்மலை கென்யோன் லக்ஷபான, நவலக்ஷ பான பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர, ஆகிய நீர்த் தேக்கங்களுக்கு அதிகளவில் குப்பைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் அதிகளவில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ஏனைய குப்பைகள் ஆகும். இவ்வாறான குப்பைகளை பெருந்தோட்ட பகுதிகளிலும், நகரிலும் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் வீசுவதால் அப் பகுதியில் உள்ள ஓடைகள் மற்றும் காட்டாறுகள் ஊடாக நீர்த் தேக்கங்களில் வந்து குவிந்துள்ளன.

இதனால் நீர்த் தேக்கங்களில் வாழும் உயிரினங்கள் அழிந்து போகும் நிலை தோன்றியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நீர்த் தேக்க பகுதிகளில் உள்ள அனைத்து குப்பைகளையும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரச்சினையை தீர்க்க தமிழ் எம்.பிக்கள் ஒத்துழைப்பர்

■ யது பாஸ்கரன்

தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடந்த 20 வருட காலமாக முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் புதன்கிழமை (27) நடைபெற்றது.

இதன்போது, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்தும், செயற்பாட்டை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவர்களை கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்.

கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த, கடந்த 20 வருட காலமாக தன்னால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் குறித்த அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்காக பல பேச்சுவார்த்தைகளை கச்சதீவு பகுதியில் ஏற்பாடு செய்ததிருந்தாகவும், எனினும் நான் கலந்து கொண்டேன். ஆனால் எந்தவிதமான முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது ஒரு தீர்மானத்துக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதாவது, சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் தமிழக தலைவர்களுடன் கலந்துரையாடி உண்மையான நிலைமையினை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் எனவும் அதற்கு சக தமிழ் உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

# பாடசாலைக் கட்டமைப்பை ஆட்கொண்டிருக்கும் போதை

ஓரளவுக்கு வயதுவந்த தனது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்து விட்டு, கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டிய நிலைமை தற்போதைய பெற்றோருக்கு உள்ளது. குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர், வீட்டிலிருந்து வெளியேறும் பிள்ளைகள் தாங்கள் எங்கு செல்கின்றோம், யாருடன் செல்கின்றோம் என்றெல்லாம், பெற்றோருக்கு தெளிவுபடுத்திவிட்டே வீட்டிலிருந்து வெளியேறுவர்.

குறிப்பிட்ட நேரத்துக்குள் வீட்டுக்குத் திரும்பாவிடின் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். இல்லையேல், எவ்வாறு அடிவிழுமென நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. அந்தளவுக்கு தங்களுடைய பெற்றோருக்கு பயந்து வாழ்ந்தனர். அவர்களிடத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

ஆனால், தற்போதைய பிள்ளைகளில் பலரிடம் அவ்வாறான மதிப்பும் மரியாதையும் எதிர்பார்க்க முடியாது. இதில் பிள்ளைகளை மட்டும் குறை கூறுவது தவறானது. ஏனெனில், பெற்றோர்களில் பலர் அவ்வாறு நடப்பதில்லை. முறையாக வேலைக்குச் சென்று குடும்பத்தை கவனிப்பதில்லை. மனைவியையும் பிள்ளைகளையும் அடித்து உதைப்பது, துன்புறுத்துவது.

அதுமட்டுமன்றி, சதா நேரமும் போதையில் இருப்பது அதிகரித்துவிட்டது. தங்களுடைய மனைவியை வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்கு அனுப்பிவிட்டு, அவர்கள் அனுப்பும் பணத்தில், குடித்து கும்மாளமிட்டு, மனைவி வெளிநாட்டில் இருந்து திரும்பும் போது, பிள்ளைகளை அநாதைகளாக விட்டுவிட்டு, வேறுவொரு திருமணம் செய்திருத்தல் எல்லாமே வழக்கமாகிவிட்டன.

இவற்றுக்கெல்லாம் பிரதான காரணம் போதைப் பழக்க வழக்கங்களாகும். பாடசாலைகளுக்கு அருகாமையில், போதைப்பொருள்கள் விற்பனை செய்யும் அதேநேரத்தில், பாடசாலைக்குள்ளும் மாணவர்கள் போதைப்பொருளை விற்க தொடங்கிவிட்டனர். அந்தளவுக்கு போதை மலிந்துவிட்டது.

பாடசாலைக்கு தண்ணீர் போத்தலில் கசிப்பு கொண்டு வந்ததிருந்த மாணவன், அதனை உயர்தர மாணவர்களுக்கு பணத்துக்கு விற்றுள்ளான். தேடிப் பார்த்தபோது, தன்னுடைய சின்னமாவின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வருவதும், அவர்களுடைய வீட்டில் கசிப்பு காய்ச்சுவதும் அம்பலமாகியுள்ளது.

பிரதான நகரங்களில் உள்ள ஒருசில பாடசாலைகளில், போதைப்பொருள் விநியோகமும் பாவனையும் அதிகரித்துள்ளன. சமூக வலைத்தளங்களில் ஊடாக ஒன்று திரள்வோர், தூர பிரதேசங்களில் ஹோட்டல்களை முன்கூட்டியே பதிவு செய்து, போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

ஒருநாட்டின் எதிர்கால தூண்கள், மாணவர்களாவர். அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கவேண்டும். அந்தப் பணி, ஆசிரியர்களிடத்திலேயே இருக்கின்றது. பல ஆசிரியர்கள் அப்பணியை திறம்படச் செய்கின்றனர். இன்னும் சிலர், போதையில் மிதக்கின்றனர். இந்த நிலைமையை இல்லாதொழிக்கவேண்டும்.

மாணவர்கள், மாணவிகள் சிலரும் போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றமை, அவ்வப்போது அம்பலமாகியுள்ளன. அஃதாவது பாடசாலை கட்டமைப்பை போதை ஆட்கொண்டிருக்கிறது.

மாணவர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்கவும் அதனால் ஏற்படும் தீமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சமூகஞ்சார் விரும்பிகள் முன்வரவேண்டும். பாடசாலை நிர்வாக மட்டத்திலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## அன்றும் இன்றும் தேர்தல் வெற்றிக்கான உத்தி



புருஜோத்தமன் தங்கமயில்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் வெளிவரும் தகவல்கள் அரசியல் அரங்கை மீண்டும் அதிர வைத்திருக்கின்றன. இந்த அதிர்வுகள் அடுத்த இரண்டு மூன்று தேர்தல்கள் முடியும் வரையில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை தீர்மானிக்கும் விடயத்திலும் வெற்றிக்கான அணி சேர்ப்பிலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்களும், அவை தொடர்பான பிந்திய வெளிப்பாடுகளும் முக்கிய இடத்தை வகிக்கும் சூழல் உருவாகியிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் தாக்கம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் முக்கிய பங்கு வகித்தது. அதாவது, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியில் அமர்வது மாத்திரமே ஒற்றைத் தீர்வு என்கிற விடயம் தென் இலங்கை முழுவதும் பெரும் பிரச்சாரமாக முன்னெடுக்கப்பட்டு, வாக்கு அறுவடை நிகழ்ந்தது. கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியோடு ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியில் அமர்ந்தார்கள். ஆனால், இம்முறை ராஜபக்ஷக்களுக்கு எதிராக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் விவகாரம் முன்னுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. தற்போது, குறித்த தாக்குதல்கள் தொடர்பில் வெளிவரும் தகவல்களை முறையாக விசாரணை நடத்தினால், அதனோடு தொடர்புடைய பல மூத்த முக்கியஸ்தர்களை கைது செய்ய வேண்டியிருக்கும். அது, ராஜபக்ஷக்களை குறைந்தது பத்து ஆண்டுகளுக்காவது முடக்குவதற்கு போதுமானது என்கிற உணர்நிலையொன்று உண்டு. அதனால், ராஜபக்ஷக்கள் எதிர்வரும் தேர்தல்களை கடந்து நின்று சிந்திக்கும் திரிசங்கு நிலைக்கு வந்திருக்கிறார்கள். கடந்த வருடம் இடம்பெற்ற, ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்ட காலத்தில் தங்களுக்கு உதவிய ரணில் விக்ரமசிங்கவையே மீண்டும் ஆபத்பாண்டவராக தேடும் நிலை ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் வெளியானவுடன், அதன் பின்னணி தொடர்பில் பல தரப்புக்களினாலும் அவதானம் செலுத்தப்பட்டது. அதில், ரணிலை தொடர்ந்தும் ஜனாதிபதியாக இலங்கையில் பேணும் தேவையின் போக்கில், குறித்த ஆவணப்படம் மிகமுக்கிய தாக்கத்தைச் செலுத்தும் என்கிற விடயம் மேலேழுந்தது. ஏனெனில், அந்த ஆவணப்படத்தில் தகவல் வெளியிட்டவர்கள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்டதற்கான சாட்சியங்களாக நின்று வெளிப்படுத்தியிருக்கின்றனர். குறிப்பாக, பதவியிலிருந்து மக்களால் துரத்தப்பட்ட ஜனாதிபதியான கோட்டாபாய ராஜபக்ஷ, இராணுவ புலனாய்வு அதிகாரி சுரேஷ் சாலே, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்கிற சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்டவர்கள் மீது நேரடியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. 2005 தொடக்கம் 2015 வரையில் இலங்கையில் இடம்பெற்ற சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள், கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல் தொடர்பில் கோட்டாபாய ராஜபக்ஷவின் ஆணைக்கு இணங்க பிள்ளையான் குழு செயற்பட்டமை, அதற்காக சுரேஷ் சாலே திட்டமிடல் அதிகாரியாக செயற்பட்டமை தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்தத் தகவல்களை மூவரும் மறுத்தாலும், அதனை முழுமையாக ஏற்கும் நிலை தற்போதுள்ள சூழலில் இல்லை. அத்தோடு, அவர்களின் மறுப்புத் தெரிவிப்பில் வெளியிடப்படும் விளக்கங்கள் தொடர்பில் சந்தேகங்களும், அவை தொடர்பிலான கேள்விகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முளைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கேள்விக்கான பதில்கள் பல அரச புலனாய்வு பிரிவுகளுக்கு தெரியும் என்று ஒய்வுபெற்ற முன்னாள் பிரதி பொலிஸ்மாஅதிபர் ஒருவர் தொலைக்காட்சி விவாதமொன்றில் வெளிப்படுத்தியிருந்தார். இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நீண்டு செல்லும் அந்த விவாதத்தை ரணிலின் மூத்த சகோதரரான ஷான் விக்ரமசிங்கவின் டி.என்.எல் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அதில், தாக்குதல் தாரிகளுக்கும் புலனாய்வுப் பிரிவிலுள்ள சிலருக்கும் இருந்த தொடர்புகள் பற்றியெல்லாம் பேசப்பட்டிருக்கின்றது.

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் வெளியாகி சில நாட்களுக்குள்ளேயே உள்நாட்டிலுள்ள தொலைக்காட்சியில், அதுவும் அண்மைக்காலத்தில் ஒய்வுபெற்ற பொலிஸ் மேலதிகாரி ஒருவர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலான விடயங்களையும் அதன் சூத்திரதாரிகள் தொடர்பிலும் பேசுவதெல்லாம் அவ்வளவு இலகுவாக நடந்துவிடக் கூடிய காரியம் இல்லை. ஏனெனில், தாக்குதல் சூத்திரதாரிகள் என்று அடையாளப்படுத்தப்படும் தரப்பு, மிகப் பலம் பொருந்தியது. அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரலாம். அப்படி வந்தால், தன்னுடைய பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதமற்ற நிலை அவருக்கு ஏற்படும் என்று தெரிந்து கொண்டே அந்த ஒய்வுபெற்ற அதிகாரி, தொலைக்காட்சியில் தோன்றி விடயங்களைப் பேசியிருக்கின்றார். அப்படியான நிலையில், அவருக்கான பாதுகாப்பு உத்தரவாதம் தற்போது ஆட்சியிலுள்ளவர்களினால் அல்லது, அதற்கு நிகரான தரப்புக்களினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ராஜபக்ஷ குடும்பத்துக்குள் இருந்து தற்போது இரண்டு நபர்கள் மாத்திரமே ரணிலுக்கு அச்சுறுத்தலாக எழுந்து வரக்கூடியவர்கள். முதலாமவர் பஷில் ராஜபக்ஷ, இரண்டாமவர் நாமல் ராஜபக்ஷ. நாமல் ராஜபக்ஷக்களை, அவரது தகப்பனாரான மஹிந்த ராஜபக்ஷ ஓரளவுக்கு கட்டுப்படுத்தி, விடயங்களை கையாள முயல்வார். அதாவது ரணிலோடு தற்போதைக்கு முட்டல் மோதல் போக்கைக் கைவிட்டு, ஓரளவு இணக்கமாக செல்லும் தேவை தொடர்பில் வலியுறுத்துவார். ஏனெனில், சனல் 4 வெளியிட்டிருக்கிற ஆவணப்படம் மிகப்பெரிய பொறி. அதனை எதிர்கொள்வது ராஜபக்ஷக்களை மிகப்பெரிய அளவில் சிக்கவைக்கலாம். ரணிலை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதைத் தவிர வேறு நிலை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என்ற நினைப்புக்கு மஹிந்த வந்திருப்பார் என்று தெரிகிறது. ஏனெனில், அவரின் நீண்டகால அரசியல் அனுபவம் அவருக்கு அதனை வழங்கியிருக்கும். கடந்த காலங்களில் அவர் அமைதியாக இருக்க வேண்டிய இடங்களில் எல்லாம் அமைதி பேணி, ஆக்ரோஷமாக எழ வேண்டிய இடங்களில் அப்படி எழுந்துதான் ஜனாதிபதி பதவியை அடைந்தார். இப்போது ரணிலை முறைத்துக் கொள்வது ராஜபக்ஷக்களின் வம்சத்துக்கு நல்லதல்ல என்ற நிலையில் அவர் இருக்கிறார். தேவையற்று முறைத்துக் கொண்டால், ராஜபக்ஷக்களை பல ஆண்டுகளுக்கு எழ விடச் செய்யாமல் இருக்கக் கூடிய பூதங்களை எல்லாம் ரணில் திறந்துவிடக் கூடும் என்ற சந்தேகம் மஹிந்தவுக்கு இருக்கலாம். ஆனால், பஷில் ராஜபக்ஷ ரணிலோடு சற்று பொருதிப் பார்த்துவிடும் நிலையில் இருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலைக் கைவிட்டால் தன்னுடைய அரசியல் எதிர்காலம் என்பது ஒட்டுமொத்தமாக முடிவுக்கு வந்துவிடும் என்பது பஷிலுக்கு தெரியும். அதனால், எப்படியாவது தன்னுடைய பிடியை வைத்துக் கொள்வதற்கான முனைப்பாக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகும் நிலைக்காக போராடுவார்.

ரணிலின் பல தசாப்தக் கனவு என்பது, தான் மக்களால் நேரடியாக தேர்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒரு முறையெனும் பதவியில் அமர்ந்து விட வேண்டும் என்பது. இப்போது, கிடைத்திருக்கின்ற பதவி, அதிர்ஷ்ட தேவதை வழங்கியது. என்னதான் ஜனாதிபதி என்ற அடையாளம் இருந்தாலும், அது மக்களால் நேரடியாக தேர்தெடுக்கப்பட்ட பதவியல்ல. அது பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட கிட்டத்தட்ட நியமிக்கப்பட்ட பதவி போன்றது. அப்படியான நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோள் மாத்திரமே அவரிடத்தில் இருக்கின்றது. அதற்கு குறுக்காக ராஜபக்ஷக்களோ, வேறுயாரோ வந்தாலும் அவர்களை தாண்டுவதற்கான திட்டங்களோடு தான் அவர் செயற்படுகிறார். அதற்காக, அவருக்கு ஒத்துழைக்கும் தரப்புக்கள் நாட்டுக்கு உள்ளும் வெளியிலும் இருக்கின்றன என்பது அவருக்கான மிகப்பெரிய உத்வேகம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னணியை ஆராய்ந்து சர்வதேச விசாரணையை நோக்கி செல்வதற்கான அவசியம் உண்டு. அதுதான், குற்றவாளிகளை தண்டிப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்குவதற்குமான வழிவகைகளை நியாயமாக ஏற்படுத்தும். ஆனால், இலங்கை ஆட்சி அதிகார அரசியல் ஒழுங்கில் நீதியை வழங்குவது தொடர்பிலான சொல்லாடலே தவறு என்பது மாதிரியான உணர்நிலை உண்டு. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்காக சர்வதேச விசாரணையை நாடினால், முள்ளிவாய்க்கால் படுகொலைக்கான சர்வதேச விசாரணையையும் தமிழ்த் தரப்புக்கள் கோரும்.

அதனால் அந்த வாசலை இலங்கை அரசு ஒருபோதும் திறக்காது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான வெளிப்பாடுகள் தேர்தல் வெற்றி தோல்விகளுக்காக பயன்பட்டு எதிர்காலத்தில் காணாமல் போகும். அதனைத் தாண்டி, அதிசயங்கள் ஏதும் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

தெரிந்தோ, தெரியாமலோ மக்கள் தவறான வாழ்க்கையை தங்கள் வசப்படுத்தி விடுகின்றார்கள். இதுபற்றி ஒருவரும் கவலைப்படுவதில்லை.

குடிகாரன் தன்னிலை இழந்து தெருவில் கிடக்கிறான். அப்போது, ஒருவன் அவனுக்குப் புத்திமதி சொன்னால், என்ன நடக்கும்? சிலசமயம் கெட்ட வார்த்தைகளைப் பேசுவான். அறிவு, பலம் அற்ற நிலையிலும் வீரன் போல் பேசுவார்கள்.

இத்தகையவர்களின் வாழ்க்கையில் ஒளியூட்டுவது எப்படி? பொதுநிறுவனங்கள், ஆன்மிக அமைப்புகள், வணக்கஸ்தல பெரியார்கள் மூலம் வழிப்படுத்த முயல வேண்டும்.

மது அருந்தினால், தன்னிலையை மனிதன் இழக்கிறான். மதுப் பழக்கத்தை கைவிட்டாலே போதும், சமூகம் சீராகும். மதுப்பழக்கம் சகல தரப்பினரையும் உருமாற்றம் செய்துவிடுகின்றது.

சேரி வாழ்க்கை, வீடுவாசல் இல்லாத தெருவோர வாழ்க்கை போன்ற நிலையில் வாழ்வோரின் அவல நிலையைச் சீராக்க, அரசுகளுடன், பொது அமைப்புகளுடன் வசதிபடைத்தோருடன் கலந்துரையாடி, உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது அவசியம். யாவரும் சீராக வாழவேண்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயத்தை காப்பாற்றவும்



திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து, தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் காவு கொள்ளப்படும் ஆபத்தை எதிர் நோக்கி இருக்கின்றது .

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த சில நாட்களாக அங்கு இடம் பெறுகின்ற மோசமான கடலரிப்பால் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவியதை குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே. துளசிதாசனுக்கும் அறிவித்தார் .

மாகாண பணிப்பாளர் எந்திரி கே. துளசிதாசன் உடனடியாக செயல்பட்டு 100 மண் மூடைகளை அங்கு அடுக்குவதற்கு பணித்தார்.

அதன்படி, அங்கு கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினரும் குருகுல இல்லமாணவர்களும் சிவதொண்டர் அணியும் அஜந்தன் தலைமையில் சிறப்பாக செயற்பட்டு பாதுகாப்பு மண் மூடைகளை அடுக்கினர்.

வி.ரி. சகாதேவராஜா

# இலண்டனில் அரங்கேற்றம்...



நாட்டிய சேத்திரா பள்ளியின் மாணவி தரண்யாவின் அரங்கேற்றம் கலாசேத்திரா நாட்டியப் பள்ளியின் முன்னாள் மாணவியும் சிறந்த பரதநாட்டிய ஆசிரியையுமான ஸ்ரீமதி திரிவேணி சங்கரின் முதல் அரங்கேற்றமாக செப்டெம்பர் 23 ஆம் திகதி இடம் பெற்றது.

உடலும் உள்ளமும் மலர இறைவனுக்கும் குருவுக்கும் சபையோருக்கும் வணக்கம் செலுத்தியபடியே நிகழ்வானது ஆரம்பமாயிற்று. விநாயகர் துதியுடன், அலாரிப்பும் அவையோரை நெகிழ வைத்தது. அடுத்து தரண்யாவே நடன அமைப்பு செய்திருந்த ஜதீஸ்வரத்தை மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் ஆடி அற்புதம் நிகழ்த்தினார்.

திருமதி அகல்யா நித்தியலிங்கம்

























## மாணவர்கள் கௌரவிப்பு

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இவ்வருட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை – தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி வரலாற்று சாதனையை படைத்துள்ளது.

மூதூர் வலயம் இவ்வருடம் பெற்றுக் கொண்ட ஒன்பது பதக்கங்களில் நான்கு பதக்கங்கள் தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டதாகும்.

மாணவர்களை வாழ்த்துவதற்காக மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் முனவ்வறா நளீம், தோப்பூர் கோட்டக்கல்வி பணிப்பாளர், பிரதி கல்வி பணிப்பாளர் உடற்கல்வி ஆகியோர்கள் செவ்வாய்க்கிழமை (26) பாடசாலைக்கு வருகை தந்து வாழ்த்தியிருந்தனர்.

தீஷான் அஹமட







## சான்றிதழ் வழங்குதல்

சம்மாந்துறை அஹதியா( (முஸ்லிம் தளம்) பாடசாலைகளின் கூட்டிணையத்தின் ஏற்பாட்டில் அஹதியா சான்றிதழ் வழங்குதல் கௌரவிப்பு விழா சம்மாந்துறை நகர மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஆசிரிய ஆலோசகர் தலைமையில் புதன்கிழமை (27) நடைபெற்றது.

வி.ரி.சகாதேவராஜா





## ஊற்றெடுக்கும் அருவிகள் கண்காட்சி




"ஊற்றெடுக்கும் அருவிகள் கண்காட்சி" திஹாரிய தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலையில் திங்கட்கிழமை (25). செவ்வாய்க்கிழமை (26) திகதிகளிள் நடைபெற்றது.

இந்த கண்காட்சியில் திஹாரிய தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலை, கஹடோவிட அல் பத்ரிய மஹா வித்யாலயம், கஹடோவிட முஸ்லிம் மகளிர் மஹா வித்தியாலயம், ஹொரகொல்ல ஒச்சட்வத்த மஹா வித்தியாலயம், உடுகொட அறபா மஹா வித்தியாலயம், திஹாறிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம், பூகொட குமாரிமுல்லை மஹா வித்தியாலம் போன்றவற்றின் மாணவர்கள் அவர்களது திறமைகளை வெளிப்படுத்தி இருந்தனர்.

ஹஸ்பர்





## மூக்கு கண்ணாடி வழங்கிவைப்பு

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி 167 சி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி சமுதாய அடிப்படை உறுப்பினர்களுக்கு இலவச கண் பரிசோதனையும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (26) இடம் பெற்றது.

காத்தான்குடி சமீம் மூக்கு கண்ணாடி (சமீம் ஒப்பிடிகல்) நிறுவனத்தின் உரிமையாளர் சமீம் இந்த மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் கண் பரிசோதனையும் இடம்பெற்றது.

எம் எஸ் எம் நூர்தீன்

## சைகைமொழி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி








சர்வதேச சைகைமொழி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை (27) நடைபெற்றது.

10 மாவட்டங்களிலிருந்து கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான சைகை மொழியாளர்கள் இந்த பேரணியில் கலந்துகொண்டதுடன்

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இலங்கை தமிழ் செவிப்புலனற்றோர் அமைப்பும் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

வா.கிருஸ்ணா



## சர்வதேச சுற்றுலா தின வைபவங்கள்





சர்வதேச சுற்றுலா தினத்தையொட்டி சுற்றுலாத்துறை அமைச்சும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் சுற்றுலா தின சிறப்பு நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட செயலக முன்றலில் புதன்கிழமை (27) இடம்பெற்றன.

ஜேர்மன் மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களும் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டு இருந்தனர்.

ரீ.எல்.ஜவ்பர்கான்

ஈராக்

### திருமண நிகழ்வில் தீ

# 113 பேர் கருகினர்

ஈராக் நாட்டின் நினே வா மாகாணத்தில் உள்ள ஹம்தானியா என்ற பகுதியில் பாக்தாத் நகரத்தில் இருந்து சுமார் 335 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிகளவில் வசிக்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள அரங்கில் புதன்கிழமை (27) நடைபெற்ற திருமண நிகழ்வில் எதிர்பாராத விதமாக திடீரென தீவிபத்து ஏற்பட்டுள்ளது. அரங்கு



முழுவதும் தீ பரவியதால் அங்கிருந்த மக்களால் வெளியேற முடியவில்லை.

குறித்த தீவிபத்தில் 100ற்கும் மேற்பட்டோர் உடல் கருகி உயிரிழந்துள்ளதோடு 150ற்கும் மேற்பட்டோர் கடுமையான தீக்காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த தீ விபத்து குறித்து விசாரணை நடத்துமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்குமாறும் ஈராக் பிரதமர் முஹம்மது ஷியா அல்-சுடானி உத்தரவிட்டுள்ளார்.

நைஜர்



# 1500 இராணுவ வீரர்கள் வெளியேற்றம்

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜர் இதற்கு முன்பு பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த 1960-ம் ஆண்டுக்கு பிறகு நைஜர் சுதந்திர நாடாக உருவெடுத்தது. இருந்த போதிலும் நைஜர் நாட்டில் பிரான்ஸ் தனது ஆதிக்கத்தை காட்டி மேலும் தனது நாட்டின் இராணுவ வீரர்கள் 1500 பேரை பிரான்ஸ் நைஜரில் நிலை நிறுத்தி இருந்தது.

இந்நிலையில் அந்த நாட்டில் நிறுத்தப்பட்டு இருந்த 1.500 வீரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்து உள்ளார்.

கனடா

# கனடா அரசு எச்சரிக்கை

கடந்த ஜூன் மாதம் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் இந்தியா-கனடா நாடுகளுக்கு இடையே மோதலை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வசித்து வரும் கனடா நாட்டை சேர்ந்தவர்களுக்கு கனடா அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவில் வசிக்கும் கனடா நாட்டினர் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கனடா அரசு சமூகவலைதளம் மூலம் அறிவுறுத்தி இருக்கிறது.

பாகிஸ்தான்

# இம்ரான்கானின் நீதிமன்ற காவல் நீடிப்பு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது தூதரகம் அனுப்பிய ரகசிய தகவலை அமெரிக்காவுக்கு அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து அதிகாரப்பூர்வ ரகசிய சட்டத்தை மீறியதாக அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது.

இதற்கிடையே தோஷகானா வழக்கில் ஒகஸ்ட் 5 ஆம் திகதி இம்ரான்கான் கைது செய்யப்பட்டு அட்டாக் சிறையில் அடைக்கப்பட்டு 14 நாட்கள் நீதிமன்ற காவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது 3-வது முறையாக இந்த 14 நாள் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் கொடிய தொற்று பரவும் அபாயம்

கொரோனா என்ற கொடூர நோய் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பரவி லட்சக்கணக்கான மக்கள் உயிரை பறித்தது.

அந்த கொரோனா அரக்கன் உருமாறி பொதுமக்களை பாடாய் படுத்தியது. இந்த தொற்றில் இருந்து உலக நாடுகள் கொஞ்சம், கொஞ்சமாக மீண்டு தற்போது தான் சகஜ நிலைக்கு திரும்பி உள்ள போதிலும் கொரோனா முழுமையாக நம்மை விட்டு அகலவில்லை என்று நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்த சூழ்நிலையில் சீனாவை அச்சுறுத்தும் வகையில் கொரோனா போன்ற கொடூர தொற்று நோய் மீண்டும் பரவ வாய்ப்பு இருப்பதாக அந்நாட்டின் தொற்று நோய் நிபுணர் ஹி சென்க்ஸ் தெரிவித்துள்ளார். வௌவ்வால்கள் மூலம் இந்த பெருந்தொற்று வேகமாக பரவும் என அவர் எச்சரித்து உள்ளார்.

ஆந்திரா

# எலுமிச்சை, சாம்பலில் ரூ.50 ஆயிரம் மோசடி

சினிமாக்களில் வரும் காமெடி காட்சிகளில் வைத்தியர்கள் பல்வேறு விதமாக பணம் பிடுங்குவதும் நூதனமாக சிகிச்சை அளிப்பது போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன. அதே போன்று சம்பவம் ஒன்று ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் தனியாக கிளினிக் நடத்தி வருகிறார். இவரிடம் அதே பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தலைவலி மற்றும் நரம்பு பகுதிகளில் வலி இருப்பதாக சிகிச்சைக்கு சென்றுள்ளார்.

அப் பெண்ணை பரிசோதித்த அந்த வைத்தியர் மருந்துகளை பரிந்துரை செய்வதற்கு பதிலாக அந்த பெண்ணிடம் எலுமிச்ச பழங்களையும் ஒரு சிறிய பையில் சாம்பலையும் கொடுத்துள்ளார். இதனைத்



தொடர்ந்து அமாவாசை தினத்தில் பெண்ணை பூஜைக்கு வருமாறும் அழைத்து பூஜை பொருட்கள் என கூறி வீட்டிற்கு வாங்க வேண்டிய மளிகை பொருட்களின் பட்டியலை கொடுத்துள்ளார்.

மேலும், அந்த பெண்ணிடம் இருந்து ரூ. 50 ஆயிரம் பணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் இதுகுறித்து அவரது உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து அவர்கள் பொலிஸில் புகார் அளித்ததையடுத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மணிப்பூர்

# இணைய சேவைகளுக்கு மீண்டும் அதிரடி தடை

மணிப்பூரில் 4 மாதங்களுக்கும் மேலாக மெய்தி-குகி இன மக்களுக்கு இடையே கலவரம் நடந்து வருகிறது. இந்த கலவரத்தில் 170-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அப்போது அதிகரித்து வந்த கலவரத்தை கட்டுப்படுத்த மே மாதம் 3-ம் திகதி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இணைய சேவை துண்டிக்கப்பட்டது. இதனால் கலவரக்காரர்களுக்கு இடையே தொடர்புகள் துண்டிக்கப்பட்டு கலவரம் படிப்படியாக குறைந்தது. இந்த சூழலில் கலவரத்தால் தடை செய்யப்பட்ட பகுதிகளில் இணைய சேவை கடந்த 23-ஆம் திகதி மீண்டும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வன்முறை செயல்கள் தொடர்பான குறுஞ்செய்திகள் அதிகம் பகிரப்பட்டு வருவதால் மணிப்பூரில் அடுத்த 5 நாட்களுக்கு இணைய சேவைகளுக்கு தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரு

# 'ஆண்ட்டி' என அழைத்த காவலாளிக்கு செருப்படி

எதற்கு கோபப்படுகிறோம் என்று தெரியாமலேயே சிலர் கோபப்படுவதால் பெரிய சிக்கல்களை சந்திக்கிறார்கள். அப்படித் தான் பெங்களூருவில் பெண் ஒருவர் காவல்துறை வழக்கை சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

அஷ்வினி என்ற பெண், ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து பணத்தை எடுத்து விட்டு கதவுக்கு அருகில் நின்றிருந்திருக்கிறார். அப்போது அந்த ஏடிஎம் மையத்தின் காவலாளி மற்றவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்குமாறு அந்தப் பெண்ணிடம் கூறியிருக்கிறார். அப்படிச் சொல்லும்



போது 'ஆண்ட்டி' என அழைத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்தப் பெண் காவலாளி தனது செருப்பால் தாக்கியுள்ளார்.

அப்போது அந்த ஏடிஎம் மையத்தில் நின்றிருந்த மற்றவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து மல்லேஸ்வரம் காவல் நிலைய பொலிஸார் அந்த பெண் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



### தியாக தீபம் திலீபன் நினைவுக் கிண்ணத் தொடர்:

# சம்பியனான ரெட்பானா நியூபாரதி

தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் ரெட்பானா நியூபாரதி அணி சம்பியனானது.

மூங்கிலாறு தேராவில் புதியநிலா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் விஸ்வமடு தொட்டியடி விக்கினேஸ்வரா அணியை வென்றே நியூபாரதி சம்பியனானது.

சம்பியனான நியூபாரதி அணிக்கு 50,000 ரூபாய் பணப்பரிசுத் தொகையும், இரண்டாமிடம் பெற்ற விஸ்வமடு தொட்டியடி விக்கினேஸ்வரா அணிக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

அத்தோடு மூன்றாமிடத்தைப் பெற்ற தர்மபுரம் இளந்தாரகை அணிக்கு 15,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இத்தொடரில் அதிகூடிய விக்கெட்டுகளை உடையார்கட்டு நண்பர்கள் அணியின் வினுசன் வீழ்த்தியிருந்ததுடன், அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீ நியூபாரதி அணியின் சுதன் அக்குத்தா தொடரின் நாயகனாகவும் தெரிவாகினார். இவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கிவைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 'யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணமுண்டு'




■ பு. கஜிந்தன்

"யாழ்ப்பாணத்தில் சர்வதேச தர கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணம் எனக்கு உண்டு" என தென்னிந்தியாவின் பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் சென்ற சந்தோஷ் நாராயணன், தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துறையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### தேசிய விளையாட்டுப் போட்டியில்

# மூன்றாமிடம் பெற்ற விரியும் சிறகுகள்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தேசிய விளையாட்டுப் போட்டியில் கடற்கரை கரப்பந்தாட்டத்துக்காக பதுளை மாவட்டம் சார்பில் ஹாலிஎல எல பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து கலந்துகொண்ட விரியும் சிறகுகள் விளையாட்டுக் கழகத்தின் மகளிர் அணி மூன்றாமிடத்தைப் பெற்றது.


மூன்றாமிடத்துக்கான போட்டியில் குருநாகல் மாவட்ட அணியை வென்றே விரியும் சிறகுகள் மூன்றாமிடத்தைப் பெற்றது.

34 ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டிகளில் வரலாற்றில் முதன்முறையாக பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியொன்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை இதுவே முதல் தடவையாகும். இவ் வீராங்கனைகளை வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் பயிற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது.

### உலகக் கிண்ணத்துக்கான

# இலங்கைக் குழாமில் சமீர, ஹஸரங்க இல்லை

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டி உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கைக் குழாமில் துஷ்மந்த சமீர, வனிடு ஹஸரங்க ஆகியோர் இடம்பெறவில்லை.



குழாம்: தசுன் ஷானக (அணித்தலைவர்), குசல் மெண்டிஸ் (உப அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் பெரேரா (விக்கெட் காப்பாளர்), திமுத் கருணாரத்ன, சரித் அஸலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்கிரம (விக்கெட் காப்பாளர்), துஷான் ஹேமந்த, மகேஷ் தீக்‌ஷன, டுனித் வெல்லலாகே, கசுன் ராஜித, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண, லஹிரு குமார.

மேலதிக வீரர்: சாமிக கருணாரத்ன.

# டைக்குவாண்டோவில் கல்முனை சாஹிராக் கல்லூரி பிரகாசிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹிம்



அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட டைக்குவாண்டோ போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மாணவர் ஒரு வெள்ளிப் பதக்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் உட்பட மூன்று பதக்கங்களைப் பெற்று கல்லூரிக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

20 வயதுக்குற்பட்ட ஆண்களுக்கான ஸ்பாரிங் நிகழ்ச்சியில் ஜே.ஏ.சுரைப் வெள்ளிப் பதக்கமும், ஏ.பி. றஸா அஹமட், ஆர்.எம். அக்தாஸ் ஆகியோர் தத்தமது எடைப் பிரிவுகளில் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 28 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.